2006 ஜனவரி 21]

சொன்னார்கள், உண்மைதான். ஆனால், அப்படிப்பட்ட மையங்களிலே மாணவர்கள் சேரத் தயங்குகிறார்கள். காரணம், என்னவென்று சொன்னால், கல்வி வசதிக்கேற்ற போதிய கருவிகள் அங்கு இல்லை, ஆசிரியர்கள் இல்லை. அதனாலே தனியார் தொழில் பயிற்சி மையங்கள் இருந்தும்கூட, இல்லாத ஒரு நிலைதான் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் கருத்திலேகொண்டு, அரசின் சார்பிலே ஒரு தொழிற்பயிற்சி மையத்தை ஆரம்பித்தால், மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைச் சொல்லி, அதைப்பற்றி ஒரு பரிசீலனையை அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லவேண்டுமென என்னுடைய சார்பிலே கேட்டுக்கொண்டு, என் தொகுதி மக்கள் சார்பாகவும் கேட்டுக்கொண்டு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. ப. அண்ணாவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நேரடிப் பார்வைக்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 73, திரு. எஸ்.கே. செல்வம், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

73—

மருத்துவமனைக் கட்டடங்கள்

***7517—திரு. எஸ்.கே. செல்வம்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனைக் கட்டடங்கள் அனைத்தையும் பராமரிக்கின்ற பொறுப்பை உள்ளாட்சி நிர்வாகங்கள் ஏற்க முன்வந்தால் அதைச் செயல்படுத்த அரசு அனுமதி வழங்குமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி நிறுவனங்களில் நிதிநிலை மிகவும் பற்றாக்குறையாக உள்ளதால், அரசு மருத்துவமனைக் கட்டடங்களைப் பராமரிக்கின்ற பொறுப்பை உள்ளாட்சி நிர்வாகங்களால் ஏற்க இயலாது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

[2006 ஜனவரி 21

திரு. எஸ்.கே. செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தைப் பெரியாருடைய துணிவையும், தென்னாட்டு காந்தி பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பேச்சாற்றலையும், கொடுத்துக் கொடுத்து சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரர் புரட்சித் தலைவருடைய ஒரே வாரிசாகவும், இன்றைய தமிழகம், நாளைய பாரதம், ஒட்டுமொத்த மக்கள் சக்தியாக விளங்கிக் கொண்டிருக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பார்க்கிறேன், வணங்குகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவைப் பொறுத்தவரை, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்கள் நிதிநிலை சீர்கேட்டைச் செய்துவிட்டுச் சென்ற அன்றையதினம் தொடுக்கப்பட்ட வினா. ஆனால், அந்த வினாவிற்கு இன்றைக்கு அவசியமே இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. காரணம், நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நிதியாதாரங்களைக் கொடுத்து, இன்றைக்கு அத்தனை கட்டடங்களையும் நல்லமுறையில் பராமரித்துக் கொடுத்திருக்கின்றார்கள். அதற்காக அம்மாவினுடைய பொற்பாதங்களில், எனது தொகுதிவாழ் மக்களின் சார்பில் நன்றியினை நான் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 74, திருமதி வளர்மதி ஜெபராஜ், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

74—

மகப்பேறு மருத்துவமனை

*** 28556—திருமதி வளர்மதி ஜெபராஜ்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மேற்கு தொகுதி, பிள்ளைமார் தெருவில், மாநகராட்சி தொடக்கப் பள்ளி பல ஆண்டுகளாக நடைபெறாமல் உள்ளதால், அந்த இடத்தில் மகப்பேறு மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மேற்கு தொகுதி, பிள்ளைமார் தெருவில் அமைந்துள்ள மாநகராட்சிப் பள்ளி இடத்தில் மகப்பேறு மருத்துவமனை அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.